பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 05 சனிக்கிழமை 18.05.2024 கதிர் 192

# முள்ளிவாய்க்காலில் இன்று காலையில் நினைவேந்தல்

## 10.30 மணிக்கு பேதங்கள் மறந்து அனைவரையும் ஒன்றிணைய அழைப்பு

இறுதிப் போரின்போது நிகழ்ந்தேறிய முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் 15ஆம் அண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று 18 முன்னெடுக்கப்படவுள்ளது. முற்பகல் 10.30 மணிக்கு முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் நடைபெறவுள்ளது.

அகவணக்கத்துடன் நினைவேந்தல் நிகழ்வுகள் ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

கிழக்கில், மூதூர், சம்பூர், சேனையூரில் நீதிமன்ற உத்தரவை மீறி முள்ளிவாய்க்கால் கஞ்சி காச்சினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட நால்வரும் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டார்கள்.

முள்ளிவாய்க்கால் கஞ்சியைக் காய்ச்சுவதற்கு எதிராக பொலிஸார் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட சிலருக்கு எதிராகத் தடை உத்தரவைப் பெற்றிருந்தார்கள். எனினும் அதன் இறுதிப் பகுதியில் இதுபோன்ற வேறு எவரேனும் கஞ்சி காய்ச்ச முற்பட்டால் அதற்கும் தடை என்பதாக ஒரு வசனம் சேர்த்துக்கொள்ளப்படுவதே வழமை.

பொலிஸார் இந்தத் தடை உத்தரவை முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்கிக்கொண்டிருந்தவர்களிடம் சென்று வாசித்துக்காட்டியபோது, அதில் தங்கள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று கூறி தடை உத்தரவை வாங்க மறுத்ததுடன், தொடர்ந்தும் கஞ்சியை வழங்கினார்கள் என்கிற குற்றச்சாட்டின் கீழேயே இந்த நால்வரும் கைது செய்யப்பட்டார்கள். ☞ 2

### முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கியது தொடர்பில்

# சேனையூரில் கைதான நால்வருக்கும் பிணை

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் - சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நால்வருக்கும் மூதூர் நீதிமன்றம் பிணைவழங்கிவிடுதலைசெய்துள்ளது.

இந்த வழக்கானது நகர்த்தல் பத்திரத்தின்மூலம் நேற்று மீண்டும் விசாரணைக்காகமூதூர்நீதிமன்றநீதிபதி தஸ்னீம் பௌசான் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சட்டத்தரணிகள் முன்வைத்த சமர்ப்பணங்களைஆராய்ந்ததுடன், பிரதிவாதிகள்மீது ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் தாம் தாக்கல் செய்த குற்றச்சாட்டுக்களைப் ☞ 9

# கல்முனையிலும் தடை நீக்கம்

(பாறுக் ஷிஹான்)

கல்முனை பிரதேசத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு எதிராக ஐவருக்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு நேற்று நீக்கப்பட்டது.

கல்முனை நீதிவான் மன்றத்தில் நீதிவான் எம்.எஸ். எம். சம்சுதீன் முன்னிலையில் இந்த வழக்கு நகர்த்தல் பத்திரம் மூலம் நேற்று மீள விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சட்டத்தரணிகளான நடராஜா சிவரஞ்சித், ரி.மதிவதனன், றிபாஸ் ஆகியோர் எதிராளிகள் சார்பில் முன்னிலையாகி இருந்தனர். பெரியநீலாவணைப் பொலிஸ் ☞ 9

# பொது வேட்பாளர் தொடர்பில் ஆராய்ந்து வருகிறதாம் ரெலோ

## கட்சிகளை ஒன்றிணைக்கவும் தயார் என்கிறார் செல்வம்

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதுடன், தேசியத்தின்பால் உள்ள தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்கும் செயற்பாட்டிலும் ரெலோ ஈடுபடுவதாக ரெலோ தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பூர்வீகம் ஒடுக்கப்படுகின்ற எங்களது தேசத்திலே அதனை ☞ 9

# காணாமலாக்குதலில் படையினருக்கு தொடர்பு என்பதை அரசு ஏற்கவேண்டும்

## அதற்காக மன்னிப்பும் கேட்கவேண்டும் என்கிறது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம்

காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் கண்டறியப்பட வேண்டியுள்ளது. காணாமலாக்குதலில் பாதுகாப்புப்படையினரும் அவர்களுடன் தொடர்புடைய ஆயுதக்குழுக்களும் ஈடுபட்டுள்ளனர் என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும், அதற்காக பொதுமன்னிப்புக் கோரப்பட வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் வலியுறுத்தியுள்ளது. அந்த அலுவலகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காணாமலாக்கப்பட்டவர்களின் விடயத்தில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் கண்டறியப்படவேண்டியுள்ளது. காணாமலாக்குதலில் பாதுகாப்புப்படையினரும் அவர்களுடன்தொடர்புடைய ☞ 9

# வெலிவேரிய பொதுமக்கள் கொலை வழக்கிலிருந்து படையினர் விடுதலை

கம்பஹா, வெலிவேரிய, ரத்துபஸ்வல பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் இராணுவ பிரிகேடியர் உள்ளிட்ட 4 படையினரை விடுதலை செய்து கம்பஹா மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி கம்பஹா, வெலிவேரிய, ரத்துபஸ்வல பிரதேசத்தில் சுத்தமான குடிதண்ணீரை வழங்கக் கோரி பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 3 பேர் உயிரிழந்தனர். 50 பேர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து, அந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் என்ற குற்றச்சாட்டில் இராணுவ பிரிகேடியர் உட்பட நான்கு இராணுவத்தினர் மீது கம்பஹா மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கில் விசேட மேல் நீதிமன்ற மூன்று நீதிபதிகள் ☞ 9

# மைத்திரிபாலவுக்கு எதிராக லஞ்ச, ஊழல் முறைப்பாடு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முறைப்பாடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

சுதந்திரக் கட்சியின் முன்னாள் செயற்குழு உறுப்பினரான மொன்டேகு சரத்சந்ரவே இம்முறைப்பாட்டை தாக்கல் செய்துள்ளார். இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு அவர் தெரிவித்துள்ள விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது

சுதந்திரக் கட்சியை விற்று பெற்றுக்கொண்ட முற்பணத்தில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்னாள் ☞ 9

# போரில் உயிரிழந்தோருக்கு கொழும்பில் நேற்று அஞ்சலி

போரில் உயிரிழந்த அனைவருக்குமாக கொழும்பு விகாரமாதேவிப் பூங்காவில் நேற்று அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. திருப்புமுனை என்ற தலைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பலரும் பங்கேற்று உயிரிழந்தமக்களுக்காக அஞ்சலி செலுத்தினர்.

'யுத்தத்தில் பற்றியெரிந்த உள்ளங்களை ஆற்ற மனித நேய நட்பு ரீதியான கூட்டம்' எனும் தொனிப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றிய நாடாளுமன்ற ☞ 9

# இலங்கையில் பல குடும்பங்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்குள்

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

இலங்கையில் இன்றும் பல குடும்பங்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்தார். தங்கள் அன்புக்குரியவர்களை நினைகூருவதற்கு அனைத்துக் குடும்பங்களிற்கும் உரிமையுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 வருடங்களாகின்ற நிலையில், காணாமல்போனோர் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப் பட்டிருந்தவர்களைச் சந்தித்த பின்னர் ஜூலி சங் இதனைத் தெரிவித்துள்ளார். ☞ 9

### காணாமற்போனோரின் உறவுகள் வலியுறுத்து

# சர்வதேசப் பொறிமுறையிலேயே தீர்வைப் பெற்றுத் தரவேண்டும்

## தம்மைச் சந்தித்த மன்னிப்புச் சபை பிரதிநிதியிடம் தெரிவிப்பு

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு சர்வதேசப் பொறி முறையில் தீர்வு பெற்றுத்தர வேண்டுமென வடக்கு, கிழக்குமாகாணங்களின் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் சங்கப் பிரதிநிதிகள் சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் காலமர்ட் இடம் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

சர்வதேச ☞ 8

# செயற்கை நுண்ணறிவுடன் விவசாயத்தில் புதிய மாற்றம்

## ஆளும் தரப்பு திட்டம் என்கிறார் ரணில்

செயற்கை நுண்ணறிவு (AI) உள்ளிட்ட நவீன தொழில்நுட்பத்துடன் இலங்கை விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த ஆளும்தரப்பு திட்டமிட்டுள்ளதாகவும், இதில் ஆர்வமுள்ள தனியார் துறை தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவையான ஆதரவை ஆளும் தரப்பு வழங்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத் ☞ 8

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

# முள்ளிவாய்க்காலில் உணர்வோடு திரள்பவர்கள் பொதுவேட்பாளரையும் ஆதரிக்கவேண்டுமாம்

முள்ளிவாய்க்காலில் உணர்வுபூர்வமாகத் திரளும் தமிழர்கள் அல்லது முள்ளிவாய்க்காலை நோக்கி உணர்வுபூர்வமாக பிணைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள், அதேபோல வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து தமிழ் மக்களின் தேசியத் திரட்சியைப் பாதுகாக்கவேண்டும்

இவ்வாறு தமிழ் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு என்கிற ஓர் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மே 18 இனஅழிப்பு நினைவு நாளில் அனைத்துத் தமிழ் உறவுகளையும் உணர்வுபூர்வமாக ஒன்றிணையுமாறு அழைக்கிறோம்.

எல்லா நினைவேந்தல்களும் தமிழ் மக்களை ஓருணர்ச்சிப் புள்ளியில் குவிக்கின்றன. அவை தாயகத்தில் மட்டுமல்ல உலகப் பரப்பெங்கும் தமிழ் மக்களை ஓருணர்ச்சிப் புள்ளியில் குவிக்கின்றன. வடக்குக் கிழக்காய் சட்டரீதியாகப் பிரிக்கப்பட்டிருக்கும் தமிழர் தாயகத்தை அவை உணர்வு பூர்வமாகப் பிணைக்கவல்லன.

அதனால்தான் கிழக்கில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சுவதற்கும் பரிமாறுவதற்கும் எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குறிப்பாக கடந்த ஆண்டிலிருந்து கிழக்கில் நினைவேந்தலுக்கு எதிராக நெருக்கடிகள் அதிகரித்து வருவது தற்செயலானது அல்ல. வடக்கும் கிழக்கும் உணர்வுபூர்வமாக இணைவதை, தமிழர்களின் தாயகம் ஓருணர்ச்சிப் புள்ளியில் ஒன்றிணைவதைத் தடுக்க விரும்பும் சக்திகள் கிழக்கில் நினைவேந்தலைத் தடுக்கின்றன.

இந்த அடிப்படையில் திருகோணமலை சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிய குற்றச்சாட்டில் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகிய எமது உறவுகளோடு தமிழ் சிவில் சமூகங்களின் கூட்டிணைவு தன் தோழமையை உறுதிப்படுத்துகின்றது. அவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றது. ஜனாதிபதி தற்போது முனைப்புக் காட்டும் உண்மை மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளை ஏன் நம்ப முடியாது என்பதற்கு மேற்படி கைது நடவடிக்கைகள் போதிய சான்றுகள் ஆகும்.

நினைவேந்தலை ஆகக் கூடிய மட்டும் பரவலாக்குவதும் தொடர்ச்சியானது ஆக்குவதும்தான் இத்தருணத்தில் தமிழ் மக்கள் செய்ய வேண்டியவை. கிழக்கில் ஒரு ஊரில் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தடுத்தால் ஏனைய எல்லா ஊர்களிலும் அதைப் பரவலாக்கவேண்டும். மே 18 நமது சிவில் சமூக கூட்டிணைவில் வரும் அனைத்து சிவில் சமூகங்களும் தத்தமது எல்லைகளுக்கு உட்பட்டு தத்தமது பிரதேசங்களில் நினைவேந்தலை அனுஷ்டிக்குமாறும் நினைவேந்தும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு கொடுக்குமாறும் வேண்டுகிறோம்.

மே 18, தமிழ் மக்களை ஓர் உணர்ச்சிப் புள்ளியில் இணைக்கின்றது. அது தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உணர்வுபூர்வமாகப் பாதுகாக்கின்றது.

அவ்வாறு தமிழ் மக்களின் தேசத் திரட்சியை உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் உறுதிப்படுத்தும் விதத்தில் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை நமது சிவில் சமூகங்களின் கூட்டிணைவு முன்வைக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் உணர்வுபூர்வமாகத் திரளும் தமிழர்கள் அல்லது முள்ளிவாய்க்காலை நோக்கி உணர்வுபூர்வமாக பிணைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள், அதேபோல வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரித்து தமிழ் மக்களின் தேசியத் திரட்சியைப் பாதுகாக்கவேண்டும் என்று சிவில் சமூகங்களின் கூட்டிணைவு அழைப்பு விடுக்கின்றது.

# மீன்பிடிப் படகு நடுக்கடலில் உடைந்து ஒருவர் உயிரிழப்பு: மற்றொருவர் மாயம்

## மூவரை உயிருடன் மீட்டது கடற்படை

வாழைச்சேனையில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் படகு நடுக் கடலில் உடைந்து விபத்துக்குள்ளானதால் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவரைக் காணவில்லை. கடலில் தத்தளித்த மேலும் மூவர் கடற்படையினரால் மீட்கப்பட்டு கரைக்குக் கொண்டவரப்பட்டனர்.

மே 12 ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்ற மீனவர்களின் இயந்திரப் படகே உடைந்து நீரில் மூழ்கி விபத்துக்குள்ளாகியுள்ளது, இதில் உயிர் தப்பியவர்களை நேற்று மாலையெ கடற்படையினர் மீட்னர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை நிந்தவூர் 9 ஆம் பிரிவு அரசடி மையவாடி வீதியைச் சேர்ந்த 42 வயதுடைய முகமது அலியார் இபிறாலெப்பை என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கல்முனையைச் சேர்ந்த 5 மீனவர்கள் வாழைச்சேனை மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து ஆழ்கடலில் மீன்பிடிப் பதற்காகக் கடந்த 12 ஆம் திகதி கடலுக்கு இயந்திர படகு ஒன்றில் சென்றுள்ளனர்.

ஆழ்கடலில் படகு உடைந்து நீரிழ் மூழ்கியதையடுத்து அதில் இருந்த மீனவர்கள் தப்பி கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர். கடல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் மீனவர்கள் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தமையை நேற்று வெள்ளிக்கிழமை மாலை கண்டனர். தத்தளித்துக் கொண்டிருந்த 3 மீனவர்களை உயிருடனும் ஒருவரை சடலமாகவும் மீட்டனர். ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இதில் உயிருடன் மீட்டகப்பட்ட ஒருவர் ஆபத்தான நிலையில் இருந்தமையயடுத்து அவரை திருகோணமலை கடற்படை முகாமிற்குக் கொண்டு சென்று வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். ஏனைய இருவரையும், மற்றையவரின் சடலத்தையும் வாழைச்சேனை மீன்பிடி துறைமுகத்திற்கு நேற்று இரவு கடற்படையினர் கொண்டுவந்து தம்மிடம் ஒப்படைத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## இனி இது .....

அந்தக் கைது நடவடிக்கை தொடர்பான காணொலி வெளியாகி பெரும் பரபரப்பையும் கொந்தளிப்பையும் கிளப்பியது. இரவு நேரத்தில் பெண்களை ஆண் பொலிஸார் தரதரவென பிடித்து இழுத்துச் செல்வது எல்லாம் காட்சிகளாகப் பதிவாகியிருந்தன. முள்ளிவாய்க்கால் நினைவுதினம் போன்ற உணர்ச்சிக் கொந்தளிப்பான நேரத்தில் பொலிஸாரின் இந்தச் செயல் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாக அமைந்திருந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பல்கலைக்கழக மாணவி. அவரது தாயாரைப் பொலிஸார் பலவந்தமாகக் கைது செய்ய முற்பட்டபோது அதனைத் தடுப்பதற்கு என்னசெய்வது என்று தெரியாத நிலையில், தனது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டினார் என்று சொல்லப்படுகின்றது. அவரைத் தடுக்கச் சென்ற பெண் காவலர் ஒருவர் நடந்த இழுபறியில் கத்தியால் வெட்டப்பட்டுக் காயமடைந்தார். பின்னர் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இப்படிக் கைது செய்யப்பட்ட நால்வரும் மறுநாள் மூதூர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். நீதிமன்றத்தில் அவர்கள் மீது ஐசிசிபிஆர் எனப்படும் சர்வதேசச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இந்தச் சட்டப் பிரிவின்படி போரைத்தூண்டுவதோ, வன்முறைகளில் ஈடுபடுவதோ, ஒன்று திரளுவதோ, இன, மத குரோதங்களை ஏற்படுத்துவதோ தவறு. இவற்றைச் செய்யும் ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கான குற்றவாளியாதல் வேண்டுமென சொல்லப்படுகிறது.

இந்த உறுப்புரையின்கீழ் உள்ள குற்றச் செயல் பாரதூரமானதும் பிணை வழங்கமுடியாததுமான குற்றமாகும். இத்தகைய குற்றச்சாட்டு புரிந்துள்ளதாக சந்தேகப்படும் அல்லது குற்றம்சாட்டப்படும் நபர் விசேட சந்தர்ப்பங்களில் உயர்நீதி மன்றத்தினூடாகவேயன்றி வேறு நீதிமன்றங்களூடாக பிணையில் செல்ல முடியாது.

அதனாலேயே அவர்களை மூதூர் நீதிமன்றம் விளக்கமறியலில் வைத்தது. அந்த மிலேச்சத்தனமான செயல் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கிழக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹணவுடன் தொடர்புகொண்டு பேசியிருந்தார். அவர்கள் கைது செய்யப்பட்ட உடனேயே சுமந்திரன் தொடர்பு கொண்டு பேசியபோது, முள்ளிவாய்க்கால் நிகழ்வுகளுக்கு எதிராக தடையுத்தரவைப் பெறும்படியான அறிவுறுத்தல்களைத் தானே வழங்கினார் என்றபோதும் கைது விவகாரம் உள்ளூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டதால் முழுமையான விவரங்கள் தனக்குத் தெரியவில்லை என்றும், எனினும் அவர்களின் பிணைக்கு பொலிஸ் தரப்பிலிருந்து ஆட்சேபனை தெரிவிக்காமல் தான் பார்த்துக்கொள்வார் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால், பொலிஸார் ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்ததால் பிணை வழங்க முடியாத நிலை நீதிவான் மன்றத்திற்கு ஏற்பட்டது.

இதையடுத்து மீண்டும் அஜித் ரோஹனவுடன் தொடர்புகொண்டு சுமந்திரன் பேசியபோது ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் வழக்கைத் தாக்கல் செய்த விவரம்பற்றித் தான் உடனடியாக அறிந்திருக்கவில்லை என்றும், எனினும் அதனைத் திருத்தி அவர்களைப் பிணையில் விடுவிக்க ஒத்துழைப்பதாகவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்திருந்தார். அதேநேரம் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிளும் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருக்காத நிலையில், பிணைக்கான நகர்த்தல் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கு குறைந்தது இரண்டு நாள்களாவது அவகாசம் தருமாறும் அவர் கேட்டிருந்தார். இந்த அடிப்படையில்தான் நால்வருக்கும் விரைவில் பிணை வழங்கப்படும் என்று இந்தப் பத்தியில் இரு நாள்களுக்கு முன்னர் நான் குறிப்பிட்டிருந்தேன்.

அதன்படி, காயமடைந்த பொலிஸார் வியாழக்கிழமை வைத்தியசாலையிலிருந்து வெளியேறி இருந்தார். அதற்கிடையில் முன்னணியின் சார்பில் சட்டத்தரணி சுகாஸ் வியாழக்கிழமை மூதூருக்குச் சென்று இவர்களின் வழக்கில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்து முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க வழிவகை செய்தார். ஆனால், அப்போதும் பொலிஸார் பிரதிவாதிகள் மீதான ஐசிசிபிஆர் குற்றச்சாட்டை திருத்தாத காரணத்தால் நீதிமன்றத்தால் பிணை வழங்க முடிந்திருக்கவில்லை. எனவே ஒன்றில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள சட்டப் பிரிவைத் திருத்துமாறும் இல்லையே அந்தக் குற்றச்சாட்டின் கீழான அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்தநிலையில் இந்த விவகாரத்தில் முன்னணியினர் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தொடங்கிவிட்டமையால் தான் ஒதுங்கிக்கொள்வதே நல்லது என்கிற முடிவுக்கு சுமந்திரன் வந்திருந்தார்.

இதனால் அவர்களின் பிணைக்கு ஏதாவது பங்கம் வந்துவிடுமோ என்ற அச்சமும் குறிப்பாகக் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவியின் படிப்பு இதனால் பாதிக்கப்படுமோ என்கிற அச்சமும் ஏற்பட்டது. இதையடுத்து மாணவியின் ஆசிரியர் ஒருவர் உட்படப் பலர் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுடன் பேசியதை அடுத்தும் அவரைத் தமது சார்பில் நீதிமன்றத்தில் பிணை பெற்றுத் தரும்படி அந்த மாணவியின் உறவினர்கள் சார்பில் கடிதம் வழங்கப்பட்டதை அடுத்தும் இந்த விடயத்தில் மீண்டும் தலையிட்டச் சம்மதித்தார் சுமந்திரன். நேற்று அவரைத் தொடர்புகொண்ட அஜித் ரோஹன, நீங்கள் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரத்தைத் தாக்கல் செய்யுங்கள் அவர்களைப் பிணையில் விடுவிப்பதற்கு ஏற்றபடி பொலிஸ் தரப்பிலிருந்து செய்யவேண்டியவற்றை நாம் செய்கிறோம் என்று தெரிவித்தார்.

அதன் பின்னரே திருகோணமலையிலிருந்து சில சட்டத்தரணிகளை ஒழுங்குபடுத்திய சுமந்திரன், யாழ்ப்பாணத்திலிருந்தும் சட்டத்தரணி சயந்தனை திருகோணமலைக்குச் சென்று வழக்கில் முற்படுமாறு கேட்டுக்கொண்டார். அதன்பின்னர் அனைத்தும் சுமுகமாகி நால்வருக்கும் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டது. ஐசிசிபிஆர் சட்டத்தின் கீழ் அவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதற்குப் போதிய ஆதாரங்கள் இல்லாததால் சாதாரண தண்டனைச் சட்டங்களின் கீழ் வழக்கை மாற்றிய பொலிஸார் பிணை வழங்குவதற்கும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. எனினும் நேற்று வெள்ளிக்கிழமை என்பதாலும் பிணைக்கான ஏனைய பணிகளைப் பூர்த்தி செய்து அவர்களை உடனடியாக வெளியே கொண்டு வர முடியவில்லை. சனி, ஞாயிறு தினங்கள் விடுமுறை என்பதால் இனி திங்கட்கிழமைதான் அவர்களால் வெளியே வரமுடியும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முள்ளிவாய்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பமாக, முள்ளிவாய்க்கால் பிரகடனம் செய்யப்பட்டு, அதன் பின்னர் பிரதான சுடர் ஏற்றப்படவுள்ளது. குறித்த சுடரைப் பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதி ஒருவர் ஏற்றவுள்ளதோடு அதனைத் தொடர்ந்து, கைச்சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நடைபெறவுள்ளது.

இந்நிலையில், பேதங்களைத் துறந்து, சுயலாப, சுய விளம்பரப் படுத்தல்களைக் கடந்து பொது நிகழ்ச்சி நிரலில் ஒன்றுபட்டு தமிழர்களாக இந்நினைவேந்தலில் ஒன்றிணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்வதாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு (வடக்கு,கிழக்கு) கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் மே 18 மாலை 6 மணிக்கு அனைத்து ஆலயங்களிலும், கோவில்களிலும் மணி ஒலி எழுப்புவதுடன் அன்று இயலுமானவரை முள்ளிவாய்க்கால் கஞ்சியையும் பரிமாறி தமிழின அழிப்பினை நினைவு கூருமாறும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு கோரியுள்ளது.

பவணி இணையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் ஆரம்பமான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்திப் பவணி மே 12 வடக்கில் ஆரம்பமாகியிருந்த நிலையில் தாயகத்தின் எட்டு மாவட்டங்களுக்கும் விஜயம் செய்வதை இலக்காகக் கொண்டிருந்தது.

இந்நிலையில் அனைத்து மாவட்டங்களுக்கும் ஊர்திப் பவணி சென்ற நிலையில் பொதுமக்கள் அஞ்சலியின் பின்னர் மே 18 முள்ளிவாய்க்கால் முற்றத்துக்குக் காலை பத்துமணிக்கு சென்றடையவுள்ளது.

சர்வதேச பிரதிநிதி பங்கேற்பு இந்நிகழ்வில், சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் அக்னெஸ் கலமார்ட் பங்கேற்கவுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கை அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், அவர் குறித்த பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்கவுள்ளதோடு ஊடகச் சந்திப்பையும் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், இந்த நினைவுகூரல் நிகழ்வில் பாதிக்கப்பட்ட பொது மக்கள், மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

போரில் உயிரிழந்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு வவுனியாவில் இன்று மாலை 5 மணிக்கு வவுனியப நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வன்னி மக்களுக்கான ஒன்றியம், வன்னி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம், சிறந்த இலங்கைக்கான மன்றம், காணாமலாக்கப்பட்டவர்களின் பிள்ளைகளின் சங்கம், உலகத் தமிழர் பேரவை, தர்மசக்தி ஒன்றியம் ஆகியன இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளன.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சர்வமதத்தலைவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் காலை 11 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

சிவில் அமைப்பினரின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்நிகழ்வில் பல்வேறுபட்ட தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர். அதேநேரம், இலங்கைத்தமிழ் அசுக் கட்சியின் பிரதிநிதிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முள்ளிவாய்கால் நினைவேந்தல் நிகழ்வும் விசேட வழிபாடுகளும் பட்டிப்பளையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுகள் காலை 9.30இற்கு ஆரம்பமாகவுள்ளதோடு ஆத்மசாந்தி வேண்டி விசேட வழிபாடுகளை அடுத்து

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை தேர்தல்கள் பற்றிய கணக்கெடுப்பு எதனையும் ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவரகம் நடத்தவில்லை

இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல் குறித்து இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவரகம் நடத்திய தனித்துவமான கணக்கெடுப்பின் அறிக்கை அவர்களது தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படுவதற்கு முன்பே வெளியிடப்பட்டுள்ளதாகவும், இந்நாட்டின் உயர்மட்ட புலனாய்வு அதிகாரி ஒருவர் ஊடாக இந்த அறிக்கை கசிந்துள்ளதாகவும் 'அரகல நியூஸ்' எனும் இணையதளம் செய்தியொன்றை பிரசுரித்துள்ளது.

இந்தச் செய்தியுடன் அறிக்கை ஒன்றும் இணைக்கப்பட்டு சமூக வலைதளங்களில் வேகமாக பகிரப்பட்டு வருவதுடன், அது குறித்து பல்வேறு கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இந்த அறிக்கை 330 பல்கலைக்கழக மாணவர்களால் 20 நாள்களாக நடத்தப்பட்ட கணக்கெடுப்பு எனக் கூறப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு மாவட்டத்தையும், ஒவ்வொரு தேர்தல் தொகுதியையும் பிரதிநிதித்துவப்படுத்தியும், ஒவ்வொரு இனத்தவர் மற்றும் ஒவ்வொரு தொழில்முறை நபர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் மக்களின் கருத்துக்கள் பெறப்பட்டதாக அவர்கள் இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர். 28 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் உள்ளகடக்கப்பட்டுள்ள விடயங்களாவன:

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச அதிக வாக்குகளைப் பெறுவார் எனவும், அக்கட்சி 36.31 சதவீத வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் எனவும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு இரண்டாவது அதிக வாக்குகள் கிடைக்கும் எனவும், அது 34.53 சதவீதமாக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி 16.35 சதவீத வாக்குகளைப்பெற்று மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் எனவும், தேசிய மக்கள் சக்தி 10.59 சதவீத வாக்குகளுடன் நான்காவது இடத்தில் இருக்கும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இந்த அறிக்கையின் உண்மைத்தன்மை குறித்து ஆராய்ந்து பார்த்ததில், ஐக்கிய நாடுகள் அகதிகள் முகவரகத்தினால் அவ்வாறான கணக்கெடுப்பு எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும், அவர்களது உத்தியோகபூர்வ இணையதளத்திலோ அல்லது, சமூக வலைதளபக்கங்களிலோ இதுகுறித்துஎந்தவொருஅறிக்கையும் வெளியிடப்படவில்லை என்பதையும் இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் Fact Seeker உறுதிப்படுத்தியுள்ளது. (05)

# பிரித்தானியாவில் மேயரானார் புலம்பெயர் இலங்கைத் தமிழர்



பிரித்தானியாவிலுள்ள நகரமொன்றின் மேயராக முதல் முறையாக புலம்பெயர் இலங்கை தமிழர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தொழில்ஆணையாளராகபதவிவகிக்கும்இளங்கோ இளவழகன் என்பவர் இப்ஸ்விச் மாநகராட்சியின் வருடாந்த கூட்டத்தில் அதிகவாக்குகளை பெற்று ஆளுநராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

'நான் இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன், இந்தபெரியநகரத்தின்ஆளுநராகநியமிக்கப்பட்டமைக்கு மிகவும் பெருமைப்படுகிறேன்' என இளங்கோ இளவழகன் குறிப்பிட்டுள்ளார்.

வேட்புமனுவை முன்மொழிந்த நகராட்சி தலைமை ஆளுநர் நீல் மெக்டொனால்ட், தான் பதவியில் இருக்கும் ஆண்டில் பொதுத் தேர்தல் முடிவை இளங்கோ இளவழகன் அறிவிப்பார் என அறிவித்துள்ளார்.

இந்நிலையில், புதிய மேயராக இளங்கோ இளவழகன் நியமிக்கப்பட்டமைக்கு அங்குள்ள தமிழ் சமூகம் வாழ்த்து தெரிவித்து நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)

# வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் 57.4 மில்லியன் ரூபா அபிவிருத்திக்கு



வவுனியா பிரதேச செயலக பிரிவில் பன்முகப்படுத்தப்பட்டநிதிதிட்டத்தின்கீழ்57.4மில்லியன் ரூபா நிதி பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனால் பகிர்ந்தளிக்கப்பட்டது.

மேற்படி நிகழ்வு வவுனியா பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவின்வழிகாட்டலில் பின்தங்கிய கிராமங்களின் அபிவிருத்திக்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதி வவுனியா மாவட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வவுனியா மாவட்டத்தின் வவுனியாபிரதேசசெயலாளர்பிரிவுக்குட்பட்டபகுதிகளில் 120 நிர்மாணப் பணிகளுக்கும், 46 உபகரணங்கள் வழங்கல் செயற்பாடுகளுக்கும் என 57.4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வேலைத்திட்டங்களுக்கான உத்தியோக பூர்வ கடிதங்கள் அப் பகுதி கிராம அபிவிருத்திச் சங்க தலைவர்களிடம் இதன்போது கையளிக்கப்பட்டது. பாடசாலைகள், மைதானங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், கிராம மட்ட பொது அமைப்புக்கள் என்பவற்றுக்கேஇவ்வாறுநிதிஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் சி.சண்முகநாதன், மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரின் பிரத்தியேக செயலாளர் டினேஸ், அரச அதிகாரிகள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05 - 100)









# கோப்பாயில் அம்மாச்சி உணவகம் வடக்கு மாகாண ஆளுநரால் திறப்பு



நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளைஅடையும்நோக்குடன், பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையால் யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அம்மாச்சி பாரம்பரிய உணவகத்தை வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் வியாழக்கிழமை திறந்து வைத்தார்.



இதன்போது வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உதவும் வகையில், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஒதுக்கீட்டின் கீழ் 10 லட்சத்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியான 12 தையல் இயந்திரங்களும் பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

பெண்களுக்கான பொருளாதார சுதந்திரத்தை உறுதிப்படுத்த அம்மாச்சி பாரம்பரிய உணவகம் கைகொடுக்கும் என இதன்போது உரையாற்றிய ஆளுநர் தெரிவித்தார். பெண்களுக்கு பொருளாதார விடுதலை கிடைக்கும் போது, அது குடும்பம், சமூகத்திற்கு கிடைக்கும் விடுதலையாக அமையும் என ஆளுநர் கூறினார்.

'கிராமிய அபிவிருத்திக்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆளுமை பெற்றவையாக காணப்பட வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் அற்ற நிலையிலும், அரச அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் தற்போது செயற்படும்உள்ளூராட்சிநிறுவனங் கள்தங்களின்ஆளுமைகளைமேலும் வலுப்படுத்த வேண்டும்.தற்போது முன்னெடுக்கப்படும் இவ்வாறன செயற்பாடுகள்மகிழ்ச்சிஅளிக்கின்றது. மேலும்பெண்களை வலுப்படுத்தும் செயற்பாடுகளும்முன்னெடுக்கப்பட வேண்டும்.பெண்கள் பொருளாதாரத்தில் சுதந்திரம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். தங்களை, தாங்களே வலுப்படுத்திக் கொள்ளவேண்டும்.இதனூடாக பெண்கள் தங்களின் வாழ்வாதாரபிரச்சினைகளுக்கு தாங்களே தீர்வை பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள்என்றநம்பிக்கை உள்ளது. - என வடக்கு மாகாண ஆளுநர் தனது உரையில் தெரிவித்தார். (05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சபதமேற்போம்

**இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினம். தமிழ் இனம் மீதான ஈவிரக்கமற்ற, குருதிச் சகதி நிறைந்த போர் கட்டவிழ்த்துவிடப்பட்டு இனவழிப்பு நிகழ்த்தப்பட்டு 15 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் நாள்.**

**இந்த நாட்டின் பூர்வக் குடிகளான தமிழர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் சிங்களவர்களுக்கு நிகரான மதிப்போடும் அதிகாரத்தோடும் வாழ விரும்பியமைக்காகக் கொத்துக் கொத்தாகக் கொன்றழிக்கப்பட்டார்கள். தமிழர்கள் தமக்கும் சம மதிப்பும் மரியாதையும் அரசியல் அதிகாரமும் வேண்டும் என்று அகிம்சை வழியில் கேட்டபோதும் அரச பயங்கரவாதத்தால் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டு அடக்கப்பட்டார்கள்.**

**அரச இயந்திரங்களான காவல்துறை மற்றும் படைகளினால் நேரடியாக மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறைகளுக்கு மேலதிகமாக இனக் கலவரங்கள் என்ற பெயரில் மிக மோசமான வன்முறைகளும் தமிர்கள் மீது திட்டமிட்டு ஏவப்பட்டன. தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். காயப்படுத்தப்பட்டார்கள், அவர்களின் சொத்துக்கள் எரிக்கப்பட்டு சூறையாடப்பட்டன, தாம் வாழ்ந்த இடங்களில் இருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள், கப்பல்களில் அடைக்கப்பட்டு வடக்கு, கிழக்குக்கு அனுப்பப்பட்டார்கள்.**

**அப்போதுதான் வடக்குகிழக்குதமிழர்தாயகத்தை தனிநாடாக்கி விடுவித்தால்தான் தமிழர்கள் நிம்மதியாக வாழமுடியும் என்ற நிலைப்பாட்டை உணர்ந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். வன்முறைப்போர்கொழுந்துவிட்டெரியத்தொடங்கியது. 30 வருடங்கள் தொடர்ந்த அந்தப் போரைக் காரணம் காட்டி தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தது இலங்கை அரசு. முள்ளிவாய்க்காலில் அந்த இனப்படுகொலையின் இறுதி நாட்கள் அரங்கேறின. மனிதாபிமானச் சட்டங்களையும், சர்வதேச மனித உரிமைச் சட்டங்களையும் மீறி கொத்துக்குண்டுகளை வீசியும் போர்ச் சூனியப் பகுதிகளுக்குள் எறிகுண்டுகளை வீசியும், பொஸ்பரஸ் குண்டுகளை வீசியும் தமிழர்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றொழித்தது அரசு.**

**இன்று வரைக்கும் அதற்கான நீதியும், நியாயமும் நிவாரணமும் தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. அதைப் பெற்றுத்தரவேண்டிய பன்னாட்டு உலகமும் அது தொடர்பில் மிக மெத்தனமாகவே இருந்து வருகின்றது. பன்னாட்டுச் சமூகத்தின் மீதான நம்பிக்கையைத் தமிழர்கள் இழந்து வருகின்ற இந்த நிலையில்தான் முள்ளிவாய்க்காலின் 15ஆவது நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறுகின்றது.**

**பன்னாட்டுச்சமூகம்,அயல்நாடுகள்இவையெல்லாம் தமிழர்களுக்கு நீதியையும் தீர்வையும் பெற்றுத் தர உதவும் என்கிற நம்பிக்கைகள் பொய்த்துப்போன நிலையில், தமிழர்கள் தாமே தமது தலைவிதியை நிர்ணயித்தாகவேண்டிய கட்டடாயத்தை ஷ்இந்தப் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிதர்சனமாகக் காட்டி நிற்கின்றது. தமக்கான தீர்வை தாமே போராடிப் பெறுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்து இந்தப் 15ஆம் ஆண்டு நிறைவில் மீண்டும் தமிழர்கள் ஒன்றிணைந்து விடுதலைக்கான நேர்மையான, உணமையான, அரசியல் ஏமாற்று அற்ற ஒரு போராட்டத்திற்குத் தயாராவோம் என்று முள்ளிவாய்க்காலில் சபதமேற்போம்.**

# சமூக ஊடகங்களில் தமிழ் நடிகர்களின் ரசிகர்கள் நடவடிக்கைகள் எப்படி உள்ளன?

**விக்னேஷ் கார்த்திக், அஜய் சந்திர வாசகம்**

அரசியல் ஆர்வமுள்ள திரைப்பட நடிகர்கள் தங்கள் நடிப்புத் தொழிலிலிருந்து அரசியலுக்குத் தாவும்போது, அவர்களது ரசிகர்கள் வீரியமான அரசியல் சக்திகளாக மாறும் சாத்தியம் உள்ளது. அத்தகைய ரசிகர்களின் விரிவான சமூக ஊடகச் செயல்பாடுகள் பொது உரையாடலை மாற்றியமைக்கும் சக்தி படைத்தவை என்பதால் அவை கவனிக்கத்தக்கவையாக உள்ளன.



தமிழ்நாட்டில் திரைப்படம் என்பது வெறும் பொழுதுபோக்கு அல்ல. இங்கே திரைப்படம் என்பது அரசியல் களத்தின் மீது செல்வாக்குச் செலுத்துகிறது; அரசியல் வெளியுடன் ஒன்று கலக்கிறது. ட்விட்டர் தளத்தில் தமிழ் திரை நாயகர்களின் ரசிகர்கள் வெளிப்படுத்தும் கருத்துகள், திரைத் துறை பேசுபொருளுக்கும், அரசியல் பங்கேற்புக்கும் இடையிலான தவிர்க்கவியலாத ஊடாட்டம் பற்றிய புரிதலை வழங்குகின்றன.

இதுநாள் வரையில் இணையத்தில் பலரை தொடர்ந்துகிண்டலும்,வசைபாடலும்புரிந்துவந்தவரை நடிகர் விஜய் தொடங்கியிருக்கும் அரசியல் கட்சியான தமிழக வெற்றிக் கழகத்தின் செய்தித் தொடர்பாளராக நியமித்திருப்பது குறிப்பிடத்தக்க நிகழ்வு. அவர் மீது மூத்த பத்திரிகையாளர் ஒருவர் அளித்த புகாரின் பேரில் ஏற்கெனவே வழக்கு ஒன்று பதியப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. சமூக ஊடகங்களில், பிரபல சினிமா நட்சத்திரங்களின் ரசிகர்கள் முன்னெடுக்கும் உரையாடல்களின் தன்மை குறித்து ஆராய்கிறது இந்தக் கட்டுரை.

### ஹேஷ்டேகுகளின் தொகுப்பு

நடிகர்களின்ரசிகர்கள்மேற்கொள்ளும்சமூகஊடக நடவடிக்கைகளை ஆராய்வதற்கு நாங்கள் ட்விட்டர் தளத்தை எடுத்துக்கொண்டோம். சூழ்நிலையைத் துல்லியமாக அளவிட இது உதவாது என்றபோதும், இது சமூக ஊடகத்தில் ரசிகர்களின் நடவடிக்கைகளை உணர்ந்துகொள்வதற்கான வகையில் பல்வேறு தரப்புகளையும் உள்ளடக்கிய தளமாகத் திகழ்வதால் அதனைப் பயன்படுத்தியுள்ளோம்.

தமிழ்த் திரைப்படம், அரசியல் தொடர்புடைய ட்விட்டர் டிரெண்டுகளைப் பகுத்தாய்வதன் மூலம் திரைப்பட நட்சத்திரங்கள் மீதான தங்கள் பற்றுதலை, சினிமா தொடர்புடைய உரையாடலைப் பயன்படுத்தி, ரசிகர்கள் எப்படி அரசியலில் பங்கேற்கிறார்கள், அரசியல் மீது செல்வாக்குச் செலுத்துகிறார்கள்; பண்பாட்டுச் சார்பையும், அரசியல் செயல்பாட்டையும் ஒன்றிணைத்துக்கொண்டு அதை எப்படிச் சாதிக்கிறார்கள் என்பதை நாங்கள் கண்டறிகிறோம்.

லண்டன் கிங்ஸ் கல்லூரியின் சமூக ஊடக வலைப்பின்னல்கள் மற்றும் (பொய்த்) தகவல் ஆராய்ச்சிக் குழுவும், சென்னையில் இயங்கும் 'பாப்புலஸ் எம்பவர்மென்ட் நெட்வொர்க் இந்தியா' என்ற ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டன. ரெகன் கே மற்றும் அவரது குழுவினர் இந்த ஆய்வுக்கு உதவி வழங்கினர்.

இதில் 2018 நவம்பர் 26 முதல் 2022 டிசம்பர் 17 வரையிலான காலத்தில் புவியியல் ரீதியாக இந்திய எல்லைக்குள் ஒவ்வொரு அரைமணி நேரமும் முதல் ஐந்து இடங்களைப் பிடித்த ட்விட்டர் டிரெண்டுகளை முறைப்படியாகத் திரட்டினோம். ஒரு டிரெண்ட் எவ்வளவு காலம் நீடித்திருக்கிறது என்ற அளவுகோலின் அடிப்படையில், ஒவ்வொரு நாளுக்குமான டிரெண்ட் பட்டியலை, பகுப்பாய்வுக்காக இறங்குவரிசையில் தொகுத்தோம்.

இப்படித் தொகுக்கப்பட்ட மொத்தம் 6,138 ஹேஷ்டேகுகளில் 342 ஹேஷ்டேகுகள் தமிழ்நாடு தொடர்புடையவை எனக் குறிப்பாக அடையாளம் காணப்பட்டன. அவற்றில் 115 அரசியல் தொடர்புடையவை என்றும் 227 அரசியல் தொடர்பற்றவை என்றும் அடையாளம் கண்டோம்.

ட்விட்டர் கணக்குகள், ஹேஷ்டேகுகள் தொடர்பான, ஆய்வின் இந்தப் பகுதியில் தமிழ்நாடு தொடர்புடையவை மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. எல்லா விதச் சதவீதக் கணக்குகளும்,எண்களும்இந்தவட்டாரஎல்லையுடன் தொடர்புபடுத்தியே பார்க்கப்பட வேண்டும். இந்த ஹேஷ்டேகுகளுடன் தொடர்புடைய பயனர் பெயர்கள், இந்த ஹேஷ்டேகுகளுடன் எவ்வளவு நேரம் பயனர்கள் நேரம் செலவிட்டார்கள், இவை பயன்படுத்தப்பட்ட கால நேரம், ஐடிகள் (IDs), இணையச்சுட்டிகள் போன்றவை ட்விட்டர் ஏ.பி.ஐ.யை (API) பயன்படுத்திக் கல்வி நோக்கத்துக்காகத் திரட்டப்பட்டன.

### கணக்குகள் வகைப் பிரிப்பு

ரசிகர்களின் சமூக ஊடக கணக்குகளுக்கும் அரசியல் ஹேஷ்டேகுகளுக்கும் இடையிலான உறவை சரியாகப் புரிந்துகொள்வதற்காக, ரசிகர்களின் கணக்குகளைப் பின்வரும் அடிப்படையில் தொகுத்துக்கொண்டோம்: அஜித் எதிர்ப்பு, விஜய் எதிர்ப்பு, சூர்யா ஆதரவு, அஜித் ஆதரவு, தனுஷ் ஆதரவு, கமல் ஆதரவு, ரஜினி ஆதரவு, சிம்பு ஆதரவு, சிவகார்த்திகேயன் ஆதரவு, விஜய் ஆதரவு, விக்ரம் ஆதரவு, மற்றவை.

அதைப் போலவே அரசியல் ஹேஷ்டேகுகளை இப்படித் தொகுத்துக்கொண்டோம்: நா.த.க. ஆதரவு, காங்கிரஸ் ஆதரவு, திமுக ஆதரவு, பாஜக ஆதரவு, நா.த.க. எதிர்ப்பு, காங்கிரஸ் எதிர்ப்பு, திமுக எதிர்ப்பு, பாஜக எதிர்ப்பு, அதிமுக எதிர்ப்பு, மாநில அரசு எதிர்ப்பு, 2021 மே மாதம் முதல் மாநில அரசு எதிர்ப்பு.

அடிக்கடி எந்த நடிகரின் ஹேஷ்டேக்குடன் கணக்குகள் செயல்படுகின்றன என்கிற அடிப்படையில் ரசிகர்களின் கணக்குகள் அடையாளப்படுத்தப்பட்டன. பிறகு இந்தக் கணக்குகள் அரசியல் ஹேஷ்டேகுகளில் எப்படிப் பங்கேற்கின்றன என்பதை ஆராய்ந்தோம். ட்விட்டர் அரசியல் டிரெண்டுகளின் மீது சில குறிப்பிட்ட ரசிகர் படைகள் எப்படிச் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை ஒப்பிட்டு அறிவதற்காக, அரசியல் ஹேஷ்டேகுகளுடன் அவை எப்படிச் செயல்படுகின்றன என்பதன் அடிப்படையில் பல்வேறு நடிகர்களின் ரசிகர் படைகளின் ட்விட்டர் செயல்பாடுகளைப் பார்ப்போம்.

### எங்கேஜ்மென்ட் விதங்கள்

வெவ்வேறு திரை நட்சத்திரங்களின் ரசிகர்களை அவர்கள் எப்படித் தொடர்பில் வைத்துக்கொள்கிறார்கள் என்பதை வகைப் பிரித்தோம்.

செல்வாக்கு மிக்கவர்கள் (அதிகபட்சத் தாக்கம் செலுத்துபவர்கள்), ரசிகர்கள் (சுமாரான தாக்கம் உள்ள இடைநிலைப் பயனர்கள்), வழக்கமானவர்கள் (குறைவான தாக்கம் உடையவர்கள்) என்ற இந்த வகைப்பாடு, ரஜினி போன்ற சில நடிகர்களுக்கு ரசிகர்களுடன் எப்படிப் பரந்த இயல்பான நேரடித் தாக்கம் ஏற்படுகிறது என்பதையும் மற்றவர்கள் தங்கள் தகவல்களை ரசிகர்களிடம் பெரிய அளவில் கொண்டுசெல்ல இடைநிலைக் கணக்குகளைச் சார்ந்து இருக்கின்றனர் என்பதையும் காட்டுகிறது.

ஒவ்வொரு நடிகரைச் சுற்றியும் ரசிகர் மன்றங்கள், சமூகப்பிணைப்புகள் உருவாகும் முறைகளானவை, ட்விட்டர் அரசியல் விவாதப்பொருள்களுடன் உரையாடும் முறையில் உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட காலத்தில், திமுக ஆதரவு ஹேஷ்டேகுகளே அதிக முறை டிரெண்டாகியுள்ளன. டிரெண்டான அரசியல் ஹேஷ்டேகுகளில் இவை 24% ஆகும். இந்த ஆய்வுக் காலத்தில் தமிழ் நடிகர் விஜய்க்கு ஆதரவான ரசிகர்களின் கணக்குகளே அதிகம் இருந்தன.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரை குழு முள்ளிவாய்க்கால் வந்தடைவு



(வி.ரி.சகாதேவராஜா)

சந்நிதி கதிர்காமம் பாதயாத்திரை ஜெயாவேல்சாமி குழுவினர் ஐந்து நாள்களின் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தினுள்பிரவேசித்துள்ளனர்.

அங்கு அவர்களுக்கு அமோக வியாழக்கிழமை வள்ளிபுனம் பிரதேசத்திற்குள் தங்கியிருந்தனர்.

சந்நிதி கலாநிதி மோகன் சாமி நேரடியாக வந்து அடியார்களுக்கு பொதிகளை வழங்கி வைத்தார்.

மழையும் வெயிலும் கலந்த காலநிலையில் சுமார் 130 அடியார்





வரவேற்பு அளிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமானது தெரிந்ததே.

கள் இப்பாதயாத்திரையில் பங்கேற்று வருகின்றனர்.

கொழும்பைச் சேர்ந்த பெர்னாண்டோ என்ற சிங்கள அடியாரும் வழமைபோல கலந்து கொள்கிறார். (05)

# சமூக ஊடகங்களில் தமிழ் நடிகர்களின் ரசிகர்கள் நடவடிக்கைகள் எப்படி உள்ளன?

அரசியல்ஹேஷ்டேகுகள்டிரெண்ட்ஆவதில்சினிமா ரசிகர்களே மிகப் பெரிய அளவில் பங்களிக்கிறார்கள். அரசியல் ஹேஷ்டேகுகளில் சினிமா ரசிகர்களின் பங்கேற்பு 55.12% ஆகும். நம் ஆய்வில் மிக அதிகப் பங்கேற்பைப் பெற்ற ஹேஷ்டேகுகளாக அடையாளம் காணப்பட்டவை பாஜக ஆதரவு ஹேஷ்டேகுகள் மற்றும் திமுக எதிர்ப்பு ஹேஷ்டேகுகளே ஆகும். வெளியிலிருந்து நிதியுதவி வருகிற வாய்ப்பு அதிகம் இருப்பதையே இந்தத் தகவல் காட்டுகிறது. மறுபுறம் திமுக ஆதரவு, பாஜக எதிர்ப்பு ஹேஷ்டேகுகளில், தலா ஹேஷ்டேக் பங்கேற்பு விகிதம் மிகக் குறைவாக இருக்கிறது.

மேலும் 2021 மே மாதம் திமுக மாநிலத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து மாநில அரசுக்கு எதிரான டிரெண்டுகளில் பங்கேற்பு 35.43% அதிகரித்துள்ளது. திமுகவுடன் கூட்டணி வைக்காத கட்சிகளின் நிதியாதரவுடன் இது நடப்பதையே இந்தப் போக்குக் காட்டுகிறது. மாநிலத்தில் ஆளுங்கட்சி எதுவாக இருந்தாலும் (திமுக அல்லது அதிமுக) மாநில ஆட்சியின் மீது மக்களுக்கு அதிருப்தி இருப்பதையும் இது காட்டுகிறது. ஆனால், தலா ஹேஷ்டேக் பங்கேற்பு விகிதம் மிக அதிகமாக இருப்பதை வைத்து ஆராயும்போது, இது மாநில / வட்டார அரசியல் சக்திகளுக்கு ஆதரவாக இல்லாத கட்சிகள் பணம் செலவிட்டு உருவாக்கும் அதிருப்தியாக இருக்கக்கூடும்.

## விமர்சகர்களின் ஆதிக்கம்

திமுக, பாஜக இரண்டு கட்சிகளுக்குமே அவர்களுக்கு எதிரான எதிர்மறை விமர்சகர்களின் ஆதிக்கம் அதிகம் இருப்பதைத் தரவுகள் காட்டுவதாகத் தெரிகிறது. ட்விட்டர் தளத்தில் பெரிய அளவில் விமர்சகர்கள் இயங்குவதை இது காட்டுகிறது. இந்த விமர்சகர்களுக்கு அடுத்தபடியாக இரண்டு கட்சிக்கும் ஆதரவானவர்களின் எண்ணிக்கை இருக்கிறது. திமுக, பாஜக தவிர அதிமுக, நாதக, காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தொடர்பான டிரெண்டுகள், விவாதங்களும் பெரிய அளவில் இடம்பெறுகின்றன.

திரட்டப்பட்ட தரவுகள் நீண்ட காலகட்டத்தைச் சேர்ந்தவை. அவ்வப்போதைய நடப்புகள், அரசியல் நிகழ்வுகள் போன்ற புறக்காரணிகளும் ட்விட்டர் டிரெண்டுகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. அரசியல் பதிவுகள், அரசியல் உலகில் சினிமா ரசிகர் படைகளின் பங்கேற்பு ஆகியவற்றை நாம் கவனித்த வரையில், அவை சமநிலையில் இருப்பதாகவே தெரிகிறது.

வெவ்வேறு அரசியல் டிரெண்டுகளில், வெவ்வேறு நடிகர்களின் ரசிகர் படைகள் பங்கேற்கும் விதம் தொடர்பான திட்ட விலக்கத்தை (standard deviation) கணக்கிட்டுப் பார்க்கும்போது, மாறுபாடுகள் மிகக் குறைந்த அளவிலேயே இருப்பதை நாம் கண்டறிந்தோம். எனினும், பின்வரும் தரவுகள் ஆவலைத் தூண்டுகிறவையாக இருந்தன:

அரசியல் ஆர்வமுள்ள கமல் ரசிகர் கணக்குகளில் (அரசியல் ஹேஷ்டேகுகளில் பங்கேற்கும் கணக்குகள்) 14.78% திமுக ஆதரவு ஹேஷ்டேகுகளில் பங்கேற்றுள்ளன. முக்கிய நடிகர்களின் ரசிகர்களின் கணக்குகளில் இதுவே திமுகவுக்கு ஆதரவான அதிகச் சதவீதப் பங்கேற்பு. அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் அஜித் ரசிகர்கள் (14.57%) வருகின்றனர். இன்னொரு பக்கத்தில் பார்த்தால், அரசியல் ஆர்வமுள்ள ரஜினி ரசிகர்களின் கணக்குகளில் மிக அதிக அளவாக, 17.95% கணக்குகள் பாஜக ஆதரவு ஹேஷ்டேகுகளில் பங்கேற்றுள்ளன. இந்தப் பங்கேற்பு மிக அதிகம். பாஜகவுக்கு ஆதரவான பங்கேற்புகளில் இரண்டாம் இடத்தில் வரும் ரசிகர் பட்டாளம் ஒற்றை இலக்கத்தில்தான் வருகிறது.

## அரசியல் திரைப்படங்களும்

ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட காலகட்டத்தில், அரசியலைவிடத் திரைப்படங்களே அதிகம் விவாதிக்கப்பட்ட பொருளாக இருந்தது. தமிழ்நாட்டில் திரைப்பட நடிகர்களின் அரசியல் வெற்றி குறித்து அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு, ரசிகர்களின் செயல்பாடு என்ற கோணத்திலிருந்து சற்றே தெளிவான விடையை இந்தக் கண்டுபிடிப்புகள் வழங்குகின்றன.

பரபரப்பான சினிமா, ரசிகர் ஆதரவுகளுக்கு இடையில் நடிகர்களின் அரசியல் ஈடுபாடு என்பது தமிழ்நாட்டில் எங்கும் பரவியிருக்கும் கருத்து முரண்கள், விவாதங்கள் நிரம்பிய அரசியல் பண்பின் நீட்சியாகவே நிகழ்கிறது. அந்தப் பண்பே மாநிலத்தின் சினிமாவிலும் பிரதிபலிக்கிறது.

ஹிட், லைக், கிளிக் போன்ற சமூக ஊடக அளவீடுகள் நிச்சயமாக ஓர் உரையாடலைக் கட்டமைக்க, கருத்தை உருவாக்க உதவுகின்றன. ஆனால், தேர்தல் போட்டிகள் இன்றளவும் முதன்மையாக, வாக்குச்சாவடி போன்ற அடிமட்டக் களத்திலேயே நடக்கின்றன. ஆர்வமான சமூக ஊடகப் பின்தொடர்வுகள் எந்த அளவுக்கு வாக்குகளாக மாறும் என்பதை மதிப்பிடுவது இப்போதைக்குக் கடினமான செயல்.

எனினும், மற்ற இடங்களிலும் கூறப்படுவதைப் போல, ஒரு கட்சி எந்த அளவுக்கு அரசியல் உரையாடலை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது, அதற்கு எந்த அளவுக்கு வளங்கள் கிடைக்கின்றன, எவ்வளவு ஊக்கமுள்ள தொண்டர்கள் இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அந்தக் கட்சிக்கு தேர்தல் வாய்ப்புகளும், அரசியல் வெற்றிகளும் கிடைக்கும். இதற்குத் தொலைநோக்கும் அரசியல் உழைப்பும் அவசியம்.

(நன்றி: அருஞ்சொல்)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மோ. சைக்கிள் மீது மரம் வீழ்ந்ததில் பொலிஸ் உத்தியோத்தர்கள் காயம்



இருபொலிஸ்உத்தியோகத்தர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் பொலிஸ்உத்தியோத்தர்கள் இருவர் காயமடைந்துள்ளனர் எனக் கவரக் குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.



இவர்கள் இருவரும் மேலும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் மூன்று மோட்டார் சைக்கிள்களில்மாத்தளையிலிருந்து அனுராதபுரம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கும் போது கவரக்குளம் பிரதேசத்தில் வைத்து, பாரிய மரமொன்று ஒரு பொலிஸ் மோட்டார் சைக்கிள் மீது சரிந்து வீழ்ந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் காயமடைந்துள்ள நிலையில் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கவரக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களால் தௌபீக் எம்.பிக்கு கௌரவம்






(எச் எம் ஹலால்தீன்)

திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தால் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நன்றிதெரிவிக்கும்நிகழ்வும் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருகோணமலை உயர் தொழில்நுட்ப நிறுவன பணிப்பாளர்ஏ.கேகோகிலன், விரிவுரையாளர்கள், கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அண்மையில் திருகோணமலை உயர் தொழில்நுட்பநிறுவனத்தில் எச்என்டி கற்கைநெறி இடைநிறுத்தப்பட்டுள்ளதை மாணவர்கள்நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்து உரியதரப்பினருடன் பேசி அதற்கான தீர்வை நாடாளுமன்ற உறுப்பினர் பெற்றுக்கொடுத்தது குறிப்பிடத்தக்கது.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

## முள்ளிவாய்க்....

(இரண்டாம்பக்கத் தொடர்ச்சி)

நினைவேந்தலும், நினைவுரையும் நடைபெறவுள்ளதோடு அன்னதான நிகழ்வும் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகணங்களில் நடைபெறும்நினைவேந்தல்களுக்கு ஆதரவாகவும், நீதியையும் பொறுப்புக்கூறலையும் நாங்கள் கோருவதற்கான ஒருவெளியாகவும் இன்று காலை 9.30இற்கு வெள்ளவத்தை தொடருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள கடற்கரையில் நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேநேரம், வடக்கு, கிழக்கில் உள்ள அனைத்து வழிபாட்டு தலங்களில்விசேடவழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## செயற்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்திற்காக இவ்வருடம் 100 பிரதேச செயலகப் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார். இதில் முதற்கட்டமாக 25 பிரதேசசெயலகப் பிரிவுகளுக்கும், இரண்டாம்கட்டமாக 75 பிரதேச செயலகப் பிரிவுகளும் விவசாயத்தை நவீனமயப்படுத்தத் தேவையானவசதிகள்வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையில்முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் கேகாலை நெலுந்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வேகா காரை உருவாக்கிய கலாநிதி ஹர்ஷ சுபசிங்கவின் பசுமை இல்லத்தைப் பார்வையிடுவதற்காக நேற்று சென்றபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇதனைக்குறிப்பிட்டார்.

இந்நாட்டின்விவசாய துறையில் 07 வருட அனுபவத்தை கொண்ட யுஜ புசழற நிறுவனத்தினால் (யுஜ) பசுமை இல்லம் மற்றும் திறந்த பயிர்ச்செய்கை உள்ளிட்ட இரு பிரிவுகளும் தானியக்க முறைமையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

நுகர்வோரின் தேவைகளுக்கு ஏற்ற வகையில், பசுமை இல்லத் திட்டங்கள் இந்த நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பசுமை இல்லங்களுக்கான சேவை மற்றும் பராமரிப்புச் சேவைகளும் வழங்கப்படுகின்றன. குறித்த நிறுவனத்தினால் கேகாலை நெலுந்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் முதலாவது பசுமை இல்லம் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. தக்காளி, மிளகு, சலாது உள்ளிட்ட விளைச்சல்கள் இந்தஇல்லத்தில்பயிரிடப்பட்டுள்ளது. காளான் உற்பத்திக்குதனியாதொரு பிரிவும் நிறுவப்பட்டுள்ளது.

தற்போது யுஜ புசழற நிறுவனத்தின் பெருமளவான உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் நிலையில் உள்நாட்டு வர்த்தக நிலையங்களிலும் இந்த நிறுவனத்தின் உற்பத்திகள் விநியோகிக்கப்படுகின்றன.

அதேபோல் இந்த நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் பசுமை விவசாயத்துக்கான தானியக்க இயந்திரங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைக்கும் விநியோகிக்கப்படுகிறது. AI Grow தேசிய பல்கலைக்கழங்களுடன் ஒத்துழைத்துச்செயற்படும்வகையில் AI தொடர்பான உயர் கல்வி வாய்ப்புக்களுக்கானவசதிகளையும் இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

AI Grow நிறுவனத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க இன்று காலை மேற்பார்வை விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது, கலாநிதி ஹர்ஷ சுபசிங்கவினால் உருவாக்கப்பட்ட மின்சார முச்சக்கர வண்டிகளையும் மோட்டார் சைக்கிள்களையும்ஜனாதிபதிரணில் விக்ரமசிங்கவும் பார்வையிட்டார்.

மேலும்உரையாற்றியஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க,

'விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது எதிர்கால பசுமைப் பொருளாதாரத்தின் அடையாளமாகும். இத்தகைய தனியார் தொழில்முனைவோரின் வழிகாட்டுதலின் கீழ் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விரிவான விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை நாட்டில் செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி இவ்வருடம் 100 பிரதேச செயலாளர் பிரிவுகளை நவீன விவசாயத்திற்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டத்தின் கீழ் 25 பிரதேசசெயலகப் பிரிவுகளுக்கும், இரண்டாம் கட்டத்தின் கீழ் 75 பிரதேசசெயலகப் பிரிவுகளுக்கும் தேவையான வசதிகள் வழங்கப்படும்.

தனியார் தொழில்முனைவோருக்கும் இந்த திட்டத்தில் இணைவதற்கு வாய்ப்பு உள்ளது. இதற்குத் தேவையான பயிற்சி மற்றும் நிதி வசதிகளை அரசாங்கம் வழங்க திட்டமிட்டுள்ளது. அதிகரித்து வரும் சனத்தொகைக்கு இணையாக உணவு உற்பத்தியும் அதிகரிக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி குறைந்த அளவு நிலத்தில் அதிக அறுவடையைப் பெற வேண்டும். அதற்கு நவீன விவசாயத்தை உருவாக்க பாடுபட வேண்டும். தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் நாட்டில் பசுமைப்பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என நான் நம்புகிறேன்' என்றார்.

## சர்வதேசப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் யுபஜணிள சல்லமர்ட்டிற்கும் வடகிழக்கின் எட்டுமாவட்டங்களைச் சேர்ந்த வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க பிரதிநிதிகளுக்கு மிடையில் நேற்று முல்லைத்தீவிலுள்ள தனியார் விடுதியில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. குறித்த சந்திப்பிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறித்தசந்திப்பின்பின்னர்வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகள் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு சர்வதேச பொறிமுறையில் தமக்கான நீதியைப் பெற்றுத்தர வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், இலங்கையின் உள்நாட்டு ஆணைக்குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்ற உள்ளக விசாரணையில் தமக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் சர்வதேச மன்னிப்புச்சபையின்செயலாளரிடம் எடுத்துக்கூறியுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்குச் சர்வதேச நீதிபதிகளின் கண்காணிப்பில், கலப்புநீதிமன்ற பொறிமுறையில் உள்ளகவிசாரணைமூம் நீதியைப் பெற்றுத்தருவது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை செயலாளர் யோசனையொன்றை முன்வைத்ததாகவும் இருப்பினும் தாம் அதை மறுத்ததுடன், சர்வதேச பொறிமுறையிலேயே காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்திற்கு நீதி தேவை என்பதை வலியுறுத்தியதாகவும் தெரிவித்தனர்.

அத்தோடு தற்போது தமக்கு புலனாய்வாளர்களால் ஏற்படுத்தப்படுகின்ற அச்சுறுத்தல்கள், தமது போராட்டத்திற்கு ஏற்படுத்தப்படுகின்ற இடையூறுகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தியுள்ளதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

தற்போது தமிழர் பகுதிகளில் இடம்பெறுகின்ற நில ஆக்கிரமிப்புக்கள்,

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் செயற்பாட்டில் ரெலோ மும்முரம்

### செல்வம் எம்.பி கூறுகிறார்




ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் ஆராய்ந்து வருவதுடன் தேசியத்தின்பால் உள்ள தமிழ் கட்சிகளை ஒன்றிணைக்கும் செயற்பாட்டிலும் ரெலோ ஈடுபடுவதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே இவ்வாறா தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

எமது பூர்வீகம் ஒடுக்கப்படுகின்ற எங்களது தேசத்திலே அதனை மீட்டெடுக்கின்ற வகையிலும் எங்களது நிலங்களைப் பாதுகாக்கின்ற வகையிலும் எங்களது மக்களுடைய சுபிட்சமான வாழ்வை பெற்றுக் கொடுக்கின்ற வகையிலே தமிழீழ விடுதலை இயக்கம் தனது கடமையை செய்து கொண்டிருக்கின்றோம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஒற்றுமையாக தமிழ் கட்சிகளை அணிதிரட்டுகின்ற செயற்பாட்டை முன்னெடுத்துவருவதோடுதேசியத்தைநேசிக்கின்ற ஏனைய கட்சிகளை உள்வாங்குவதற்கான பேச்சை ஆரம்பித்திருக்கின்றோம்.

அந்த வகையிலே எமது மக்களிற்காகவும், மண்ணிற்காக துப்பாக்கி ஏந்திய நாம் எம் மண்ணையும், மக்களையும் காப்பாற்றும் செயற்பாட்டினை தொடர்ந்து செய்வோம்.

மேலும் எமது வன்னி மாவட்டத்தை குறிப்பாக வவுனியா மாவட்டத்தின் பூர்வீகத்தை ஒழிக்கின்ற தென்னிலங்கை சக்திகளின் செயற்பாட்டினை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியை மேற்கொள்வோம்.

நீதிமன்றத்தில் தமிழரசு கட்சி மீது வழக்கு இருப்பதன்காரணமாககட்சிகளைஒன்றிணைக்கும் எமது செயற்பாடு தொடர்பாக இதுவரை தமிழரசு கட்சியுடன் கலந்துரையாடவில்லை. இவ்வழக்கு தொடர்பான முடிவு வரும் பட்சத்தில் அவர்களுடன் பேசி பொதுச் சின்னத்தில் இணைந்து அதன் ஊடாக அக்கட்சியின் ஊடாக எல்லாவிதத்திலும் இணைந்து செயற்பட தயாராக இருக்கின்றோம்.

ஜனாதிபதி தேர்தலின் முன்னர் நாடாளுமன்ற தேர்தல் நடாத்தப்படும் என செய்திகள் வருகின்றன. எங்களைப் பொறுத்த வரை எமது மக்களின் பிரச்சினை ஓங்கி ஒழிக்க வேண்டியதே பிரதானமாகும். அந்த வகையிலே இரண்டு தேர்தல்களையும் சந்திப்பதற்கு தயாராகவே இருக்கிறோம்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. அந்தவகையில் மாவட்டம்தோறும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்ற நிலையிலே திருகோணமலையிலே பொலிஸார் அடாவடிதனமாகவும் மூர்க்கத்தனமாகவும் பெண்களை இழுத்து மோசமாக நடாத்துகின்ற செயற்பாட்டிற்கு எமது கன்டனத்தை தெரிவித்துக்கொள்வதோடு இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகளிற்கு தடை உத்தரவு போடுகின்ற யாராக இருந்தாலும் எமது மக்கள் மண்ணிக்க மாட்டார்கள்.

அந்தவகையில் எமது மக்களை மோசமாக நடத்துபவர்கள், எமது நிலங்களை அபகரித்தவர்களுக்கு ஜனாதிபதி தேர்தலின் போது எமது மக்கள் முகம்கொடுக்க மாட்டார்கள். அத்தோடு இவ்வாறான செயற்பாடு காரணமாகவே பொது வேட்பாளர் என்ற விடயம் மேலோங்கி இருக்கின்றது.

மேலும் இது தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். – என்றார்.

# போலி வைத்தியர்கள் குறித்த முறைப்பாடுகளை வழங்கத் தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

நாட்டில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலி வைத்தியர்கள் காணப்படுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவர்களில் சிலர் பொதுமக்களுக்குப் போதை மாத்திரைகளை விற்பனை செய்வதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் சலின் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான போலி வைத்தியர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் கிடைத்தால் 1907 என்ற தொலைபேசி இலக்கத்திற்குத் தெரிவிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அவர்களில் பெரும்பாலானோர் வைத்திய துறை தொடர்பில் எந்தவித முன் அனுபவமும் திறனும் இல்லாதவர்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அனுமதிபத்திரமின்றி இரத்தினகல் வியாபாரம்: சீனப் பிரஜைக்கு 3,50,000 ரூபாய் அபராதம்

அனுமதிப்பத்திரம் இன்றி இரத்தினக்கல் வியாபாரத்தை நடத்தி ஆறு மாதங்களில் 36 மில்லியனுக்கும் அதிக வருமானம் ஈட்டிய குற்றச்சாட்டில் சீனப் பிரஜை ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 2 ஆண்டுகள் கடூழிய சிறை தண்டனை விதித்து மூன்றரை லட்சம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது .

சீன மொழிபெயர்ப்பாளராக பணிபுரிவதற்காக இலங்கைக்கு வந்து, அனுமதிப்பத்திரம் இன்றி இலங்கையில் இரத்தினக்கல் வியாபாரத்தை நடத்தி ஆறு மாத குறுகிய காலத்தில் 36 மில்லியனுக்கும் அதிகமான வருமானத்தைபெற்ற சீன பிரஜை ஒருவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (05)

## சர்வதேசப்....

(எட்டாம்பக்கத் தொடர்ச்சி)

பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பாகவும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பாதிப்பு நிலை தொடர்பிலும் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பொது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்டெடுக்கின்ற வகையிலும் எங்களதுநிலங்களைபாதுகாக்கின்ற வகையிலும்எங்களதுமக்களுடைய சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக் கொடுக்கின்ற வகையிலே தமிழீழ விடுதலை இயக்கம் தனது கடமையினைச்செய்துவருகின்றது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கமானது ஒற்றுமையாக தமிழ்க்கட்சிகளைஅணிதிரட்டுகின்ற செயற்பாட்டினை முன்னெடுத்து வருவதோடு தேசியத்தினை நேசிக்கின்ற ஏனைய கட்சிகளினை உள்வாங்குவதற்கான பேச்சையும் தொடங்கியிருக்கின்றோம்

அந்த வகையிலே எமது மக்களிற்காகவும், மண்ணிற்காக துப்பாக்கி ஏந்திய நாம் எம் மண்ணையும், மக்களையும் காப்பாற்றும் செயற்பாட்டினை தொடர்ந்து செய்வோம். மேலும் எமதுவன்னிமாவட்டத்தைகுறிப்பாக வவுனியாமாவட்டத்தின்பூர்வீகத்தை ஒழிக்கின்ற தென்னிலங்கை சக்திகளின் செயற்பாட்டினை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியினை மேற்கொள்வோம்.

நீதிமன்றத்தில்தமிழ்அரசுக்கட்சி மீது வழக்கு இருப்பதன் காரணமாக கட்சிகளை ஒன்றினைக்கும் எமது செயற்பாடு தொடர்பாக இதுவரை தமிழ் அரசுக் கட்சியுடன் கலந்துரையாடவில்லை. இவ்வழக்கு தொடர்பான முடிவு வரும் பட்சத்தில் அவர்களுடன் பேசி பொதுச் சின்னத்தில் இணைந்து அதன் ஊடாக, அக்கட்சியின் ஊடக எல்லா விதத்திலும் இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலின் முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும் எனச் செய்திகள் வருகின்றன. எங்களைப் பொறுத்த வரை எமது மக்களின் பிரச்சினை ஓங்கி ஒலிக்க வேண்டியதே பிரதானமாகும். அந்த வகையிலே இரண்டு தேர்தல்களையும் சந்திப்பதற்கு தயாராகவே இருக்கிறோம்.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் அனுஸ்டிக்கப்படுகின்றது. அந்தவகையில் மாவட்டம்தோறும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டு வருகின்ற நிலையிலே திருகோணமலையிலே பொலிஸார் அடாவடிதனமாகவும் மூர்க்கத்தனமாகவும் பெண்களை இழுத்து மோசமாக நடத்துகின்ற செயற்பாட்டிற்கு எமது கண்டனத்தை தெரிவித்துக்கொள்வதோடு இவ்வாறான அஞ்சலி நிகழ்வுகளிற்கு தடை உத்தரவு போடுகின்ற யாராக இருந்தாலும் அவர்களை எமது மக்கள் மண்ணிக்க மாட்டார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அந்தவகையில் எமது மக்களை மோசமாக நடாத்துபவர்கள், எமது நிலங்களை அபகரித்தவர்களிற்கு ஜனாதிபதி தேர்தலின் போது எமது மக்கள் முகம்கொடுக்க மாட்டார்கள். அத்தோடு இவ்வாறான செயற்பாடு காரணமாகவே பொது வேட்பாளர் என்ற விடயம் மேலோங்கி இருக்கின்றது. மேலும் இது தொடர்பாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

(100)

## சேனையூரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் நீக்கிக்கொண்டதை அடுத்தும்பிரதிவாதிகள்நால்வரையும் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

பிணைக்கான நகர்த்தல் விண்ணப்பத்தினை சட்டத்தரணி நாகராஜா மோகன் தாக்கல் செய்திருந்தார். இதற்கு ஆதரவாக சட்டத்தரணி புவிராஜசிங்கம் முகுந்தன், சட்டத்தரணி தேவராஜா ரமணன் மற்றும் சட்டத்தரணி சயந்தன்ஆகியோர்முன்னிலையாகி இருந்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் நெறிப்படுத்தலின் கீழ் இந்த பிணை விண்ணப்பம் நீதிமன்றத்தில் நகர்த்தப்பட்டிருந்தது.

சேனையூர் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறிய குற்றச்சாட்டில்சம்பூர்பொலிசாரினால் குறித்த நால்வருக்கும் எதிராக ஐ.சி.சி.பி.ஆர் சட்டம் 3 (1) இன் கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்த நிலையில், அதற்கான போதியளவான ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் அதனை நீக்கிக் கொண்டு குறித்த வழக்கை சம்பூர் பொலிசார் நகர்த்தல் பத்திரத்தின் மூலம் தண்டனைச் சட்டக்கோவை பிரிவின்கீழ்தாக்கல்செய்திருந்தனர்.

வழக்கு மீண்டும் மே 27 விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். கடந்த 12ஆம்திகதி சேனையூர் புவன கணபதி ஆலயத்தில் முள்ளிவாய்கால் கஞ்சி பரிமாறிய குற்றச்சாட்டில் அன்றைய தினம் இரவு கமலேஸ்வரன் விஜிதா, பல்கலைக்கழக மாணவி கமலேஸ்வரன் தேமிலா, செல்வினோத் குமார் சுஜானி, நவரெட்ணராஜா ஹரிஹரகுமார் ஆகியோர் கைது செய்யப்பட்டுஐ.சி.சி.பி.ஆர்சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்தனர்.

## காணாமலாக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுதக்குழுக்களும்ஈடுபட்டுள்ளனர் என்பதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்,அதற்காக பொதுமன்னிப்புக் கோரப்பட வேண்டும்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட அனைத்து இலங்கையர்களையும் ஒருபோதும் மறந்துவிட முடியாது. காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் அவர்களின் உறவுகளும் நீண்ட காலமாகக் காத்திருக்கின்றனர், உண்மையை அறிந்துகொள்வதற்கான உரிமை அவர்களுக்கு உள்ளது.

குற்றங்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். ஆயுத மோதல்கள் நிறைவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், ஆரம்பகட்ட வலிந்து காணாமலாக்கப்படுதல்கள் இடம் பெற்று பல தசாப்தங்கள் கடந்துள்ள நிலையிலும், இலங்கை அதிகாரிகள் உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த இன்றுவரை தவறியுள்ளனர்.

இலங்கையில் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களை ஒருபோதும் மறக்ககூடாது என்பதனை இந்த அறிக்கை மீண்டும் நினைவுபடுத்துகின்றது. பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் அவர்கள் குறித்து அக்கறையுள்ளவர்களும் நீண்டகாலமாக காத்திருக்கின்றனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவருக்கும் பதில்சொல்லவேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்குள்ளது, இந்த குற்றங்களை முழுமையாக விசாரிக்கவேண்டியது அவசியமாகும்.

இந்தக்குற்றங்கள்காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் அன்புக்குரியவர்களை மாத்திரம் வேதனைக்குள்ளாக்கவில்லைஒட்டுமொத்தசமூகங்களையும்இலங்கை சமூகத்தை முழுமையாகவும் வேதனைப்படுத்துகின்றது

இலங்கையின்உள்நாட்டுயுத்தம் முடிவிற்கு வந்து 18ஆம் திகதியுடன் 15 வருடங்களாகின்றது. 1970கள் முதல் 2009 வரை இலங்கையில் பரந்துபட்ட அளவிலான வலிந்து காணமாலாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன இதில் இலங்கையின் பாதுகாப்பு படையினரும் துணை இராணுவகுழுக்களும் ஈடுபட்டன

வலிந்து காணாமலாக்கும் சிறிய எண்ணிக்கையிலான நடவடிக்கைகளில் அரசாங்கத்தை எதிர்த்த ஆயுத குழுக்களும் ஈடுபட்டன. தனிப்பட்ட நபர்கள் மற்றும் குழுசெவ்விகள் மூலம் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்ட ஐநாவின் அறிக்கை பலவந்தமாக காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் எதிர்கொள்ளும் உளவியல் சமூக பொருளாதார தாக்கங்கள் குறித்தும் ஆராய்ந்துள்ளது.

ஏப்பிரல் 2024ம் ஆண்டு கொழும்பில் உள்ள ஐநா அலுவலகத்தின் முன்னால் வழங்கிய பேட்டியில் சாந்தி (பெயர் மாற்றப் பட்டுள்ளது) தனது கணவர் 2009 இல் காணாமல்போனது குறித்து இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அன்று காலை ஐந்து மணிக்கு வீட்டிலிருந்து சென்றார் ஐந்தரைமணியளவில்அவர்கடலில் வைத்து கைதுசெய்யப்பட்டார் என்ற தகவல்கள் கிடைத்தன கடற்படையினர் அவரை கைதுசெய்வதை அவருடன் சென்றவர்கள் பார்த்துள்ளனர், அவரை கப்பலிற்குள் வீசியுள்ளனர் அவர் கைகள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் நிர்வாணமாக காணப்பட்டார் என சாந்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய விசாரணை ஆணைக்குழு மற்றும் சர்வதேச அமைப்புகளிடம் அவர் தனதுகணவர்காணாமல்போனமை குறித்து முறையிட்டுள்ளார்.

நான் எனது முறைப்பாட்டை ஐநா செஞ்சிலுவை சங்கம் அரசாங்கத்திடம் பதிவு செய்தேன் நான் எனது கணவர் இலங்கை கடற்படையால் கைதுசெய்யப்பட்டார் என்பதை உறுதிசெய்தேன். ஆனால் இதுவரையில் எவ்வித மானநடவடிக்கைகளிலும்எடுக்கப்படவில்லை.

காணாமாலாக்கப்பட்டவர்கள் பற்றியஅலுலவலகம்நம்பிக்கையை வெல்லவில்லை.மாறாகஅதனுடைய செயற்பாடுகள் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளன என்றும் அந்த அறிக்கையில் காண்பபடுகின்றது.

## இலங்கையில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் அன்புக்குரியவர்களை நினைகூருவதற்கு அனைத்துக் குடும்பங்களிற்கும்உரிமையுள்ளது. அவர்களின் கதைகள் அமைதியான நீடித்தஅரசியல்தீர்வின்அவசியத்தை நினைவுபடுத்துகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

## வெலிவேலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயத்தினால் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது. பிரதிவாதிகள் அனைவரும் குறித்த சந்தர்ப்பத்தில் சட்டவிரோதமாக அங்கு ஒன்றுகூடியதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாமையை அடுத்தே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக நீதிபதிகள் ஆயம் அறிவித்துள்ளது.

## கல்முனையிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பதிகாரி வாதங்களை முன்வைத்தார். சட்டத்தரணிகள் பதில்வாதங்களை முன்வைத்தனர்.

அவற்றை ஏற்றுக்கொண்ட நீதிவான்சம்சுதீன், பொதுமக்களுக்கு எவ்வித இடைஞ்சலும் வராத வகையிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பதாகைகளை சின்னங்களைக்காட்சிப்படுத்தாமலும் இறந்தஉறவுகளுக்குயாரும்அஞ்சலி செலுத்துவதைத் தடைசெய்ய முடியாது. எனவே, அமைதியாக நினைவேந்தலைச் செய்யலாம் - என்று உத்தரவு பிறப்பித்தார்.

கல்முனை நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசத் தில் மே 15 முதல் மெ 19 வரையான காலப் பகுதிக்கு முள்ளிவாய்க்கால்நினைவேந்தலை நடத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் புஷ்பராஜ் துஷானந்தன், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், மனித உரிமைச் செயற்பாட்டாளர் தாமோதரன் பிரதீபன், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்களின்அம்பாறைமாவட்ட தலைவி தம்பிராசா செல்வராணி மற்றும் விநாயகம் விமலநாதன் ஆகியோருக்கு எதிராக பெரிய நீலவணைப் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரகாரம் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவே நேற்று நீக்கப்பட்டது.

இதேவேளை சம்மாந்துறை நீதிவான் மன்றத்தில் முள்ளிவாய்க்கால் நினைவுக்கஞ்சி தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரனு எதிராக விதிக்கப்பட்ட தடையும் நேற்று நீக்கப்பட்டது. பொதுமக்கள் சார்ந்த எந்த ஒரு நினைவேந்தல் நிகழ்வினையும் நிகழ்த்த முடியும் எனவும் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் மற்றும் சின்னங்களை பயன்படுத்தி எந்தவொரு நிகழ்வையும் நடத்த முடியாது எனவும் நினைவுக் கஞ்சி வழங்குவது தொடர்பாக பொலிசாருக்கு தடை உத்தரவு பெற அனுமதி கிடையாது எனவும் சம்மாந்துறைநீதிவான்கருணாகரன் உத்தரவு பிறப்பித்தார்.

முன்னதாக, முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்குவதற்கு சம்பூர் நீதிமன்றத்தினால்விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவும் சட்ட வாதங்களின் பின்னர் நீக்கப்பட்டிருந்தது.

## போரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கில்போரின்இறுதிக் கட்டத்தில் உயிரிழந்தவர்களை நினைவு கூருகின்ற இந்த வாரத்தில் நாட்டின்தலைநகரிலும்நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறுவது தமிழ் மக்களின் வேதனையில் தெற்கு மக்களும் பங்குகொள்கின்றார்கள் எனஎண்ணத்தோன்றுகின்றது. இது மிகவும் முக்கிய ஒரு திருப்புமுனையாகும்.

கொடூரமானபோரில்உயிரிழந்த அனைவருக்காகவும் இந்த நிகழ்வைத் தலைநகரில் நடத்துவது மிகவும் ஒரு ஆரோக்கியமான திருப்புமுனை. 15 ஆண்டுகளின் பின்புகூட இப்படியானநிகழ்வுநடப்பது அது திருப்புமுனையின் ஆரம்பம் என்று நான் நினைக்கின்றேன்.

2010ஆம் ஆண்டு முதலாவது நினைவு கூரல் எதிர் நோக்கியிருந்தபோதுதான் நான் முதல் தடவையாக நாடாளுமன்றத்துக்கு வந்து ஓர் உரையாற்றினேன். அந்தவேளையிலேகற்றுக்கொண்ட பாடங்கள்நல்லிணக்கஆணைக்குழு ஒன்றுநியமிக்கப்பட்டிருந்தது. அந்த ஆணைக்குழுவின் பரிந்துரை ஒரு குறித்த தினத்திலே தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும் என்பது. நாங்கள் வடக்கு-கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள் என்றபடியால அந்த யோசனையை வரவேற்றோம். அதிலே சேர்ந்து ஈடுபடுவோம் எனச் சொல்லியிருந்தோம். ஆனால், இதுநாள்வரைக்கும் நிகழவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் காலிமுகத்திடலிலே மக்களாக 'அறகலய' போராட்டத்தை நடத்தியபோது ஒரு நிகழ்வைச் செய்தார்கள். ஆனால், இன்றைக்கு உயிரிழந்த அனைத்து இலங்கையர்களுக்குமாக இந்த நிகழ்வு இடம்பெறுகின்றது.

வடக்கு, கிழக்கிலேயிருந்து மக்களுடைய நல்லெண்ணத்தை இந்த வேளையிலே உங்களிடத்தில் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். தங்களுடைய வேதனையிலே நீங்களும் பங்குகொள்கின்றீர்கள் என்பது அவர்களுக்கு ஒரு சிறு ஆறுதலை மனதிலே கொடுக்கும் - என்றார்.

## மைத்திரிபால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நட்டஈட்டை செலுத்தியுள்ளார். இந்நிதி எவ்வாறு பெறப்பட்டது? இது தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கோடி ரூபா இழப்பீட்டை செலுத்துமாறு நீதிமன்றம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உத்தரவிட்டிருந்தது.

அதற்கிணங்க, ஒன்றரை கோடி ரூபாவை அவர் செலுத்தியுள்ள நிலையில், எஞ்சிய பணத்தை செலுத்த தம்மிடம் வசதி இல்லை என்றும் பகுதி, பகுதியாக செலுத்த பத்து வருடங்கள் கால அவகாசம் தருமாறும் மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்திடம் வேண்டுகோள்விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய பின்னணியில் மே 13 அவரால் 2.8 கோடி ரூபாய் நிதி அவரால் செலுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளி வருகின்றன. 8.5 கோடி ரூபாயை செலுத்த 10 வருடங்கள் கால அவகாசம் கோரியிருந்த நிலையில் திடீரென அவரால் எப்படி 2.8 கோடி ரூபாய் பணத்தைச் செலுத்த முடிந்தது? என்று அவர் தனது முறைப்பாட்டில்

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# மருத்துவப் பயிற்சி ஆராய்ச்சித் தொகுதி கட்டடம் ஜனாதிபதியால் மே 24 யாழ்ப்பாணத்தில் திறப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்காக யாழ் நகரில் புதிதாகக் கட்டப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சித் தொகுதி கட்டடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் திறந்து வைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாணத்திற்கு இருநாள் விஜயமாக வருகைதரும் ஜனாதிபதி இம்மாதம் 24 ஆம் திகதி குறித்த கட்டடத்தை திறந்துவைக்கவுள்ளார்.

இந்த கட்டடத் தொகுதியில் இரண்டு பெரிய தியேட்டர்கள், ஒரு சிறிய தியேட்டர், எண்டோஸ்கோபி மற்றும் மேமோகிராம், கருவுறுதல் பராமரிப்பு, யூரோடைனமிக் சேவைகள், கேட்போர் கூடம், முதுகலை மையம் மற்றும் மருத்துவ பணியாளர் அறை மற்றும் கற்பித்தல் வசதிகள் உள்ளன.

இந்தக் கட்டடத்தொகுதி 700 மில்லியன் ரூபா செலவில் கல்வி அமைச்சால் நிதி ஒதுக்கீட்டுக்கமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பொருள்களின் விலை அதிகரிப்பால் செலவு அதிகரித்து கட்டடத் தொகுதி இன்னும் நிறைவு பெறாமல் இருப்பதுடன் கட்டடத்தை முழுமையாக நிர்மாணித்து பூர்த்தி செய்ய 130 மில்லியன் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. (05)

# தலங்கமவில் போதைப் பொருள் கடத்தலிலீடுபட்ட இருவர் கைது

ஐஸ் போதைப்பொருள் மற்றும் யஸ் போதைப்பொருள்களை காரில் ஏற்றிச்சென்ற இருசந்தேகநபர்களை பொலிஸ்விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கைதான இருவரும் தலங்கம, ஹினாட்டிகும்புர பிரதேசத்தில் வைத்து விசேட அதிரடிப்படையினரால்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் கொழும்பு 08 பகுதியை சேர்ந்தவர் எனவும் மற்றொரு சந்தேக நபர் பிலியந்தலை பகுதியை சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

அவர்கள் பயணித்த காரில் 10 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளும் 80 மில்லிகிராம் யஸ் போதைப்பொருளும் கைப்பற்றப் பட்டுள்ளன.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் பணிப்புரையின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் பல்வேறு குற்றசெயல்களை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# வடக்கு மாகாண அபிவிருத்திக்கு ஒத்துழைப்புகளை வழங்க தயார்

## அமெரிக்கத் தூதுவர் உறுதி



வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ்'க்கும், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் நேற்று (வெள்ளிக்கிழமை) சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாண அபிவிருத்தி செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

கால்நடை உற்பத்திகளை மேம்படுத்த வேண்டியுள்ளதாகவும், இயந்திர தொழில்நுட்ப பயன்பாட்டை மக்கள் மயப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது ஆளுநர் தெரிவித்தார்.

காணி விடுவிப்பு, விடுவிக்கப்பட்டுள்ள காணிகளுக்குள் மக்கள் பிரவேசிப்பதற்கான வசதிகள் தொடர்பிலும் அமெரிக்க தூதுவர், ஆளுநரிடம் கேட்டறிந்துக்கொண்டார்.

ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஆளுநர் தெரிவித்தார். அத்துடன் அண்மையில் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பிரவேசிப்பதற்கான வீதிகள் உரிய நடைமுறைகளை பின்பற்றி திறக்கப்படுவதாகவும் ஆளுநர் கூறினார்.

மேலும், வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய கண்காட்சி செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம், ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

வடக்கிற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க தயாராக உள்ளதாக தெரிவித்த இலங்கைக்கான அமெரிக்க தூதுவர், மாணவர்களுக்கு இலவச ஆங்கில மொழி வகுப்புக்களை ஆரம்பிக்க உள்ளதாகவும், அதற்கான ஒத்துழைப்புகளை ஆளுநரிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

27 வருடங்களின் பின்னர் அமெரிக்க அமைதி காக்கும் கழகத்தின் ஊடாக இலங்கையில் இலவச ஆங்கில மொழி வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அமெரிக்க தூதுவர் கூறினார்.

# 3, 718 கஞ்சா செடிகளுடன் தனமல்விலயில் ஒருவர் கைது

தனமல்வில பொலிஸ் பிரிவிற்குற்பட்ட ஹம்பேகமுவ பிரதேசத்தில் 3,718 கஞ்சா செடிகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் தனமல்வில, ஹம்பேகமுவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹம்பேகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் சந்தேக நபரிடமிருந்து 3,718 கஞ்சா செடிகள் கைப்பற்றப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# எல்ல – வெல்லவாய வீதி மீண்டும் திறக்கப்பட்டது

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த எல்ல - வெல்லவாய வீதி போக்குவரத்துக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இந்த வீதியில் பயணிக்கும் சாரதிகள் வாகனங்களைக் கவனமாகச் செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர் .

எவ்வாறாயினும், மழை பெய்தால் இந்த வீதி மீண்டும் ஆபத்தானதாக மாறக்கூடும் என அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது. அப்படியானால், எந்த நேரத்திலும் இந்த வீதி மீண்டும் மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாத்தறையில் தொடருந்து மோதியதில் ஒருவர் இறப்பு

மாத்தறையில் இருந்து காலி நோக்கி பயணித்த ரயிலில் மோதி நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து மாத்தறை, நுபே ரயில் கடவைக்கு அருகில் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மாத்தறை வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(05)

# உயிரிழந்தவர்களை நினைவேந்த அனைவருக்கும் உரிமையுள்ளது

## ஜூலிசங் திட்டவட்ட அறிவிப்பு





தங்கள் அன்புக்குரியவர்களை நினைவுகூருவதற்கு அனைத்துக் குடும்பங்களிற்கும் உரிமையுள்ளது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் முடிவடைந்து 15 வருடங்கள் பூர்த்தியாகவுள்ள நிலையில் அதற்கு முன்னதாக காணாமல்போனோர் குடும்பங்கள், முன்னாள் போராளிகள், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களை சந்தித்தேன்



என ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இன்றும் பல குடும்பங்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்கள் அன்புக்குரியவர்களை நினைகூருவதற்கு அனைத்துக்குடும்பங்களிற்கும் உரிமையுள்ளது எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

அவர்களின் கதைகள் அமைதியான நீடித்த அரசியல்தீர்வின் அவசியத்தை நினைவுபடுத்துகின்றன என அவர் தெரிவித்துள்ளார்.

# முல்லை புதுக்குடியிருப்பில் மர்மப் பொதியால் பரபரப்பு



முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் காணப்பட்ட மர்ம பொதியால் அந்தப் பகுதியில் பரபரப்பு நிலை ஏற்பட்டிருந்தது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இலங்கை வங்கிக்கு அருகில் மர்ம பொதி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளதையடுத்து குறித்த பகுதி மக்கள் மத்தியில் பரபரப்பு நிலை ஏற்பட்டிருந்தது.

மேற்படி விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து, சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸார் குறித்த மர்மபொதியை பரிசோதனை செய்யும் போது குறித்த பொதியின் உரிமையாளர் தன்னாலே இப்பொதி தவறவிடப்பட்டது என கூறி அடையாளம் காட்டி பொலிஸாரிடம் இருந்து வாங்கி சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நினைவேந்தல்கள் தொடர்பில் பொதுக்கொள்கை இல்லையா?

### ஜனாதிபதியிடம் மனோ கேள்வி

நினைவேந்தல் தொடர்பில் ஒரு பொதுக் கொள்கை ஏன் அரசுக்கு இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வியாழக்கிழமை இரவு தொலைபேசியில் கேள்வி எழுப்பியதாக மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, இலங்கை பொலிஸாரால் தனிப்பட்ட இல்லம் ஒன்றிற்கு தேடி சென்று இறந்தவர்களை நினைவில் ஏந்தி நிற்கும் தமிழ் பெண்களை கதற வைத்து, இழுத்து சென்று கைது செய்துள்ளதாகவும் சுட்டிகாட்டியுள்ளார்.

புலிகள் இயக்கம் சட்டப்படி தடை செய்யப்பட்டது எனவும் அது சட்ட பிரச்சினை என்பதோடு அந்த இயக்கத்தின் சின்னங்கள் எதுவும் இல்லாமல் தங்கள் வீட்டில் கஞ்சி காய்ச்சி குடித்த மக்களை பொலிஸார் ஏன் தேடி சென்று கைது செய்யவேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியதாகத் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி உரையாடல் குறித்து மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில் –

கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் அதிகாரிகளுடன் முரண்பட்டுள்ளமையால் கைது செய்யப்பட்டனர் எனவும் இந்த விடயம் தொடர்பாக பிணை கோரிக்கையை எதிர்க்க வேண்டாம் என பொலிஸாருக்கு சட்ட ஒழுங்கு அமைச்சர் டிரான் அலஸ் கூறி விட்டார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டமை தொடர்பில் இவ்வாறான பல கேள்விகளை எழுப்பியபோது 'அவர்கள் விடுவிக்கப்படுவார்கள்' என்று மட்டுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக்கு பதில் கூறினார்.

'நினைவேந்தல் தொடர்பில் பொதுக் கொள்கை இல்லையா ? அறிவிக்க முடியாதா?' என்ற எனது கேள்விகளுக்கு ஜனாதிபதி பதில் அளிக்கவில்லை, என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் மேலும் தெரிவித்தார்.

## முள்ளிவாய்க்கால் கஞ்சி பருகிய இராணுவத்தினர்



2009ஆம் ஆண்டு தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட தமிழினப்படுகொலை வாரம் மே 12 முதல் மே 18 வரை வடக்கு, கிழக்கு உள்ளிட்ட தமிழர் வாழும் தேசமெங்கும் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டு வருகிறது.

அந்தவகையில், யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில், பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை இடம்பெற்றது.

வீதியில் பயணித்த பொதுமக்களுக்கு மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது.

இதன்போதே, வீதியில் பயணித்த இராணுவத்தினரும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை சிரட்டையில் பெற்றுப் பருகியுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு வடக்கு - கிழக்கில் கஞ்சி விநியோகிக்கும் நிகழ்வு மற்றும் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.05.2024இல் வெளியிடப்பெற்றது